**பலபிடிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 16 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பலபிடிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ரூபா 7,439,652 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 355,980 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | முன்னைய ஆண்டிற்கான முத்திரைக் கட்டண பெறுவனவு ரூபா 5,000,000 தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த பிழையினை சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 38,171,682 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை என்பதால் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) பிரிவு 149 | சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து ஒரு சதவீத வரி அறவீடு செய்வதற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பெறவேண்டிய மொத்த வருமானத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) பிரிவு 182 | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் மற்றும் சபையின் அங்கீகாரம் இன்றி 2013 ஆண்டு முதல் காணப்படும் நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 181,030 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை பதிவழிப்பதற்காக தேவையான அங்கீகாரத்தை பெற்ற பின்னர் பதிவழிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எழுத்தாணை வழங்கப்பட்டு நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 6,034,816 தொகைக்கான வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,827,894 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 45,365,855 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 15,449,000 | 13,022,778 | 14,439,340 | 17,007,896 | 8,130,000 | 6,988,267 | 5,003,370 | 15,106,612 |
| வாடகை | 2,950,000 | 265,125 | 331,475 | 351,833 | 2,650,000 | 144,700 | 963,025 | 369,164 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,705,000 | 9,927,433 | 9,926,433 | 1000 | 5,581,000 | 5,530,761 | 5,540,011 | 181,030 |
| ஏனைய வரு மானங்கள் | 85,335,000 | 27,100,000 | 19,576,880 | 65,158,369 | 117,455,000 | 56,565,652 | 31,528,075 | 140,400,601 |
| | 108,439,000 | 50,315,336 | 44,274,128 | 82,519,098 | 133,816,000 | 69,229,380 | 40,034,481 | 156,057,407 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், 17 மிகை ஊழியர்களின் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 08 ஊழியர்களின் ஊழியர் கடன் ரூபா 185,803 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நி.பி. 71 கீழ் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

3.2 செயலாற்றல்

(அ) செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதில் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 மாகாண சபை மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் கிடைத்திருந்த ரூபா 450,000 தொகைக்கான இரண்டு நிர்மாண வேலைகள் 2019 திசெம்பர் 31 திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நெறிமுறை அடிப்படை மானியத்தின் கீழ் வதுகெதர தொட்டவத்தை தகனசாலையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,000,000 ற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாண வேலை 2019 திசெம்பர் 31 திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(இ) செயற்திட்ட செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் அதிகாரப் பிரதேச பொதுமக்களுக்கு நிறைவேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 35,064,000 தொகை பெறுமதியான 43 செயற்திட்டங்களில் 09 செயற்திட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நிறைவேற்றுவதற்கான இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தி பாதீட்டு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பாதீடு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களை நிறைவேற்றுவதன் சதவீதத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |